**தலைப்பு 273 – புத்தளம் மாவட்டச் செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தல்

(ஆ) மாவட்டச் செயலகம், அரசாங்கத்தின் பிரதான ஒருங்கிணைப்பு நிறுவனம் என்ற வகையில் அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அரசாங்க நியதிகளுக்கு இணங்கும் விதத்தில் அமுல்படுத்துதல், செயன்முன்னேற்றங்களை மீளாய்வுசெய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

(இ) அந்தந்த சந்தர்ப்பங்களில் விதிக்கப்படும் நியதிச்சட்டக் கட்டளைகள் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல்.

(ஈ) மக்களின் சட்டம், ஒழுங்கினைப் பேணுவதற்கும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரச பாதுகாப்புத் துறையுடன் ஒருங்கிணைப்பைப் பேணுதல்.

(உ) அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்கள், அமைச்சுக்கள் என்பவற்றினது மாவட்டப் பிரதான முகவர் நிறுவனம் என்ற வகையில் அவற்றின் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி ஒருங்கிணைப்புச் செய்தல்.

(ஊ) அரசாங்க வருமானக் கணக்களிப்பு தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தராக அரசாங்க வருமானத்தைச் சேகரித்து கணக்கீடு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

## 2. மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) வென்னப்புவ
(ஆ) நாத்தாண்டிய
(இ) சிலாபம்
(ஈ) ஆரச்சிகட்டுவ
(உ) புத்தளம்
(ஊ) கற்பிட்டி
(எ) வண்ணாத்திவில்லு
(ஏ) கறுவலகஸ்வெவ
(ஒ) நவகத்தேகம
(ஓ) ஆனமடுவ
(ஔ) மஹகும்புக்கடுவல
(∴) தங்கொட்டுவ
(க) மாதம்பை
(கா) பல்லம
(கி) முந்தல்
(கீ) மஹவெவ

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

-----------------------------------------------

புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்கப் பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஏ) வரையான பொது அவதானிப்புகள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு காண்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்ககளைச் சமர்ப்பித்தல்**

மாவட்டச் செயலகத்தினால் 27301 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்று 2014 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது ஒரு மாத கால தாமதத்தின் பின்னர் 2014 மே 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

மாவட்டச் செயலகத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேட்டின் வகை** | **தொடர்புடைய பிரமாணம்** |
|---|---|---|
| (i) | நட்டங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ii) | காசோலை வழங்குதல் பதிவேடு மற்றும் வாக்குப் பணப் பேரேடு | நிதிப்பிரமாணம் 445 |
| (iii) | வாகனங்களில் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை | நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 |
| (iv) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (v) | கணனிகள், துணைப் பாகங்கள் மற்றும் மென் பாகங்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(இ) கணக்காய்விற்கான சான்றின்மை**

மாவட்டச் செயலகத்தின் இரண்டு வாகனங்கள் விபத்துக்குள்ளாகியமையால் ரூபா 77,850 நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த நட்டம் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காகப் பெற வேண்டியிருந்த திறைசேரியின் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஈ) கணக்காய்வு ஐய வினாக்களிற்கு பதிலளித்தல்**

மாவட்டச் செயலகத்திற்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினா ஒன்றுக்கு 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐய வினா தொடர்பில் கணிப்பிடக்கூடியதாகவிருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 23,829,072 ஆகக் காணப்பட்டது.

**(உ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(I) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மாவட்டச் செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 566,163,079 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 563,385,099 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 2,777,980 அல்லது 0.5 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான** | | | **சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 502,963,079 | 501,956,463 | 1,006,616 | 0.2 |
| மூலதனம் | 63,200,000 | 61,428,636 | 1,771,364 | 2.8 |
| **மொத்தம்** | **566,163,079** | **563,385,099** | **2,777,980** | **0.5** |

**(ii) பாதீட்டு முரண்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பதினான்கு செலவின விடயங்களிற்கு மிகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களிற்குரிய தேறிய ஏற்பாடுகளில்

04 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான வீச்செல்லை அளவில் காணப்பட்டன.

- மூலதனச் செலவின விடயமொன்றுக்கும் மீண்டுவரும் செலவின விடயமொன்றுக்கும் நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இலுள்ள ஏற்பாடுகளின் கீழ் ரூபா 2,020,767 நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 782,422 சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் 07 சதவீதமாகவும் மாற்றப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 39 சதவீதமாகவும் காணப்பட்டது.

**(iii) கைவிடுதல்கள்**

2001 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் மாவட்டச் செயலகத்திற்கும் பிரதேச செயலகம் ஒன்றுக்கும் உரித்தான புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படாத நட்ட இழப்புக்களின் பெறுமதி ரூபா 77,850 ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**(iv) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 27 அமைச்சுக்களிடமிருந்தும் 17 திணைக்களங்களிடமிருந்தும் ரூபா 643,040,178 கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடு மாவட்டச் செயலகத்திற்குக் கிடைத்திருந்ததுடன், அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து முறையே ரூபா 160,588,771 மற்றும் ரூபா 408,624,623 ஆக ரூபா 569,213,394 கூட்டு மொத்தத் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் இறுதியளிவில் முறையே ரூபா 46,506,832 மற்றும் ரூபா 27,319,952 என ரூபா 73,826,784 கூட்டுத் தொகை அல்லது வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் முறையே 22 சதவீத மற்றும் 6 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 27301 ஆம் விடய இலக்கத்திற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்தஎல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27301 | 40,000,000 | 30,866,915 | 30,000,000 | 63,368,643 | 184,000,000 | 135,099774 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவிடுதல்கள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 4,683,799 கூட்டுத் தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவையான மீதிகளில் ரூபா 1,506,807 கடன் மீதி 2014 ஆகஸ்ட் வரையில் அறவிடப்பட்டிருந்தது.

(ii) 2012 திசெம்பர் 31 ஆந் திகதிய 157 ஆம் இலக்க மற்றும் 2013 சனவரி 31 ஆந் திகதிய 157(i) ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கைகள் மற்றும் 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்தப்பட முடியுமான அதிகூடிய இடர் கடன் தொகை ரூபா 250,000 ஆன போதிலும், மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களின் 07 உத்தியோகத்தர்களிற்கு அந்த எல்லையினைக் கருத்திற்கொள்ளாது கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

(iii) அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு தொடர்பான நிதிப்பிரமாணம் 506(டீ) பிரகாரம் 03 பிரதேச செயலகங்களினால் தயாரித்து அனுப்பிவைக்கப்பட்டிருந்த 03 அறிக்கைகளிலுள்ள தனிப்பட்டோர் மீதி வகைப்படுத்தல்களின் பொழிப்புக்கும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 67,041 வேறுபாடு காணப்பட்டது.

(iv) அறவிடப்பட வேண்டிய ஏனைய மீதிகளிடையே, 04 பிரதேச செயலகங்களிற்குரிய ரூபா 678,299 இனங்காணப்படாத மீதிகளும் காணப்பட்டன. அதில் 2014 ஆகஸ்ட் மாதமளவில் ரூபா 125,100 தீர்வுசெய்யப்பட்டிருந்தது.

**(எ) கட்டு நிதிக் கணக்கு**

மாவட்டச் செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதிக் கணக்கில் காணப்பட்ட வரவு மீதி ரூபா 62,941,846 ஆகும். நாட்டுக்கு மகுடம் அபிவிருத்தி பிரேரணைகள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த இந்த கட்டு நிதி மீதி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியன்று தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், அது 09 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருந்தது.

**(ஏ) பொது வைப்புக் கணக்குகள்**

மாவட்டச் செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட மீதிகள் ரூபா 303,680,344 கூட்டுத் தொகையாகும்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களிற்குரிய காலம் கடந்த ரூபா 23,839,080 கூட்டுத் தொகையான வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நல்லாளுகை மற்றும் கணக்களிப்பொறுப்பு

### 1.6.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் 08 பிரதேச செயலகங்களிற்கு 04 உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், 08 பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகம் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

### 1.6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை செயற்படுத்தல்

மீளாய்வாண்டில் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்டச் செயலகத்திற்குரிய இரண்டு மோட்டார் வாகனங்கள் ஆண்டு முழுவதும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ii) நாத்தாண்டிய பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த ''ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை'' செயற்திட்டத்தின் கீழ் மானிங்கல நீர் வழங்கல் செயற்திட்டம் தொடர்பில் 2011 ஆம் ஆண்டில் ரூபா 718,010 செலவிடப்பட்டு கிணறு ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2012 ''கிராம எழுச்சி'' செயற்திட்டத்தின் கீழ் ரூபா 939,000 செலவில் இதற்காக நீரிறைக்கும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் ''வயம்ப மறுமலர்ச்சி'' செயற்திட்டத்தின் கீழ் அதற்காக ரூபா 170,000 செலவில் நீர்க் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2014 மார்ச் மாத கணக்காய்வுச் சந்தர்ப்பத்திலும், இந்த வளங்கள் எவ்வித நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாது விளைவற்று இருந்தன.

**(ஆ) வெளித் தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

மாவட்டச் செயலகத்திற்கு சொந்தமான இரண்டு கட்டிடங்கள் வெளித் தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக எவ்விதத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

மாவட்டச் செயலகத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் குறைவான காலமாக நிலவி வருகின்ற தீர்க்கப்படாதிருந்த பொறுப்புகள் ரூபா 11,201,635 கூட்டுத் தொகையாகக் காணப்பட்டதுடன், அப் பொறுப்புகள் 2014 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தன.

## 1.8 இணக்கமின்மை

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| **(i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை** | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவு | ஆனமடுவ பிரதேச செயலகத்தின் பதவியணியிலுள்ள 15 உத்தியோகத்தர்கள், 09 வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் 14 கிராம உத்தியோகத்தர்கள் 2013 ஆம் ஆண்டில் தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக விடுமுறைகளைப் பெற்றிருந்தனர். |
| **(ii) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | |
| • நிதிப்பிரமாணம் 94(1) | மூலதனச் செலவின விடயத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு ரூபா 323,784 ஆகக் காணப்பட்ட போதிலும், அச் சேமிப்பினை ரூபா 9,915,836 இனால் விஞ்சி ரூபா 10,239,620 பொறுப்புகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன. |
| • நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகம் பயன்படுத்தியிருந்த 11 வாகனங்களிற்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(iii) பொதுநிர்வாகச் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2012 யூன் 29 ஆந் திகதிய 13/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2:1 ஆம் பந்தி | ஆனமடுவ பிரதேச செயலகத்தில் இலங்கை நிர்வாக சேவையின் இரண்டு உத்தியோகத்தர்கள் 06 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக தொடர்ந்தும் உத்தியோகபூர்வ கடமைகளில் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. |

**(iv) பொது நிதிச் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 437 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரசாங்க வாகனங்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் அல்லது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி செய்யப்பட வேண்டிய போதிலும், புத்தளம் மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான 12 வாகனங்களை அதன்படி காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(v) ஏனைய சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2006 திசெம்பர் 15 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை. | ஆனமடுவ பிரதேச செயலக அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மரணமடைந்த ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பான தகவல்கள் கிராம உத்தியோகத்தர்களினால் அறிவிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணக்கமின்மை**

2012 நவம்பர் 22 ஆந் திகதிய SD/INF/12/11/09 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரின் (முத்திரைத் தீர்வை) சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கமைய 2013 ஆம் ஆண்டிற்காக சிலாபம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்த இரண்டு மதுபான அனுமதிப்பத்திரங்களிற்காக அறவிடப்பட்ட ரூபா 20,000 வீதமான ரூபா 40,000 கூட்டுத்தொகையுடைய முத்திரை வரி, உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

## 1.9 சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

மாவட்டச் செயலகம் மற்றும் 10 பிரதேச செயலகங்களால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்களினது பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சீராக்கல் விபரம் | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 06 மாதங்களிற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த | 01 ஆண்டிற்கு மே 03 ஆண்டுகளிற்கு குறைந்த | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | தேறாத வைப்புகள் | 36,048 | - | 36,048 |
| (ஆ) | வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த காசோலைகள் | 789,054 | 16,897 | 805,951 |
| (இ) | இனங் காணப்படாத செலவு வைத்தல்கள் | 175,754 | - | 175,754 |

## 1.10 முகாமைத்துவப் பலவீனங்கள்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்லம, ஆனமடுவ, மஹகும்புக்கடவல, புத்தளம் மற்றும் வண்ணாத்திவில்லு ஆகிய பிரதேச செயலகங்களினால் 2013 ஆம் ஆண்டில் வயம்ப எழுச்சி மற்றும் பணன்முகப்படுத்திய முதலீட்டு நிதிகளை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 821,730 பெறுமதியான உபகரணங்கள் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) பல்லம பிரதேச செயலகத்திற்கு பன்முகப்படுத்திய பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், சமூக நலனோம்பல் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 109,450 செலவில் வில்பத கிராமிய அபிவிருத்தி சங்கத்திற்கு 4 சந்தர்ப்பங்களில் பல்வேறு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் பகிர்ந்தளிக்கப்பட்ட பொருட்கள்

பிரதேசத்திலுள்ள தபால் அலுவலகத்திலும் தனியார் வீடொன்றிலும் வைக்கப்பட்டிருந்தமையால் அவற்றை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(இ) ‘‘இருப்பதில் சிறந்தது நாட்டின் பிள்ளைகளிற்கே’’ என்ற தொனிப்பொருளின் கீழான ஆரம்பப் பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்சித்திட்டத்தின் போது பல்லம, நவகத்தேகம மற்றும் மஹகும்புக்கடவல போன்ற பிரதேச செயலக பிரிவுகளிற்குட்பட்ட அதிகாரப் பிரதேசத்திலுள்ள ஆரம்ப பாடசாலைகள் புனரமைப்பு நடவடிக்கைகளின் போது, போலியான அளவுத்திட்ட அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 64,056 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், நவகத்தேகம ஆரம்ப பாடசாலையின் புனரமைப்பு நடவடிக்கைகளின்போது மக்களின் பங்களிப்பைக் கருத்திற்கொள்ளாது ரூபா 9,018 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஆனமடுவ மற்றும் நவகத்தேகம போன்ற பிரதேச செயலக பிரிவுகளிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த 06 கிராம உத்தியோகத்தர்களினால் தமக்குரிய நிரந்த பிரிவுகளிலும் பதிற்கடமை புரியும் பிரிவுகளிலும் ஒரே தினத்தில் சேவையாற்றியதாக குறிப்பிட்டு மாதாந்த பிரயாணச் செலவினமாக ரூபா 3,150 இனை மேலதிகமாகப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

(உ) ஆனமடுவ மற்றும் புத்தளம் பிரதேச செயலகங்களிலிருந்து ஓய்வூதியத்தைப் பெற்ற இரண்டு ஓய்வூதியம் பெறுபவர்கள் மரணமடைந்திருந்த போதிலும், ரூபா 79,179 கூட்டுத் தொகை அவர்களது மாதாந்த ஓய்வூதியமாக வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஆனமடுவ, வண்ணாத்திவில்லு மற்றும் நவகத்தேகம பிரதேச செயலகங்களிலிருந்து பல்வேறு நிதியங்களின் கீழ் ரூபா 262,915 செலவிடப்பட்டு மூன்று சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்பட்டிருந்த செயற்பாடுகள் தேவையான நியமம், தகைமை மற்றும் தேவையான வசதிகள் இன்மை காரணமாக அச் செலவினம் பயனற்றதாகியிருந்தது.

(எ) சேவை இடமாற்றம் கிடைக்காது 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக ஆனமடுவ, புத்தளம் மற்றும் நவகத்தேகம பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 17 பேர்கள் ஆகும்.

(ஏ) நவகத்தேகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள எருனுக்குலிய ரஜமஹ விஹாரையின் அறநெறிப் பாடசாலைக் கட்டிடத்தின் அத்திவாரம் வரை வேலைகளைப் பூர்த்தி

செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்த இரும்புக் கம்பிகள் உரிய தரத்தில் காணப்படாமையால், 53 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2012 கமநெகும (பிற்போடப்பட்ட) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 196,000 நிதி ஏற்பாட்டைச் செலவிட்டு வண்ணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பண்டாரநாயகபுர ஆரம்பப் பாடசாலை கட்டிடத்திற்காக 2013 யூலை 31 ஆந் திகதி பொருத்தப்பட்டிருந்த கிரீல்கள் அனைத்தும் 2014 ஏப்ரல் 08 ஆந் திகதியளவில் துருப்பிடித்திருந்தன.

(ஒ) 2007 ஒக்தோபர் 05 ஆந் திகதிய G.நிர்/க/1/ஓ/ஓய்வூதிய ஆம் இலக்க பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை மற்றும் 2006 திசெம்பர் 15 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் ஓய்வுதியத்தைச் செலுத்துவதற்காகக் குறித்த ஓய்வூதியம் பெறுனர் உயிரோடு உள்ளார் என்பதற்கான சான்றிதழொன்று வருடந்தோரும் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள கிராம உத்தியோகத்தரினால் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பல்லம, வண்ணாத்திவில்லு, புத்தளம் மற்றும் மஹகும்புக்கடவல ஆகிய பிரதேச செயலகங்களினால் 206 ஓய்வூதியம் பெறுவோர்களிடமிருந்து உயிரோடுள்ளமைக்கான சான்றிதழ் 2014 மார்ச் மாதமளவிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 மே 16 ஆந் திகதிய 04/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின்படி, ஓய்வூதியம் பெறுபவர்களிற்காக வழங்கப்படுகின்ற ரூபா 2,000 மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி வெளிநாட்டில் வசிக்கின்ற ஓய்வூதியம் பெறுபவர்களிற்கு வழங்கப்பட முடியாத போதிலும், மஹவெவ மற்றும் சிலாபம் பிரதேச செயலக பிரிவுகளில் வெளிநாடுகளில் வசித்துவரும் 42 ஓய்வூதியம் பெறுனர்களிற்கு வாழ்க்கைச் செலவுப் படியாக ரூபா 1,036,325 செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) வென்னப்புவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள நூராணி கைத்தொழில் பேட்டையிலுள்ள 0.158 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய விசாலமான அரசாங்கக் காணி 4/10/18078 ஆம் இலக்க நீண்ட காலக் குத்தகையின் கீழ் 1999 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனைக் குத்தகைக்கு எடுத்திருந்த குத்தகை தாரரால் உடன்படிக்கையின் பிரகாரம் தொழில் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் அக் காணியின் உரித்தினை மீளக் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) வென்னப்புவ பிரதேச செயலகத்தினால் 4/10/15695 ஆம் இலக்க நீண்ட கால குத்தகையின் கீழ் நூராணி கைத்தொழில் பேட்டையிலுள்ள 05 ஏக்கர் விஸ்தீரணமுடைய விசாலமான காணித் துண்டொன்றை 1999 ஆம் ஆண்டு முதல் அனுபவித்து வந்திருந்த கம்பனியொன்று 2009 ஆம் ஆண்டில் அக் காணியில் ஏறத்தாழ 2 ½ ஏக்கர் மாத்திரம் போதுமென்பதால், அந்த அளவினை வழங்குமாறு மேற்கொண்டிருந்த கோரிக்கைக்கு அமைய அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டிலிருந்து உரிய குத்தகைப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. குத்தகைப் பணம் செலுத்தியிருக்காமையால் உடன்படிக்கையினை இரத்துச் செய்து காணியின் உரித்தினை மீளக் கையேற்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கா) மாதம்பை பிரதேச செயலகத்தினால் 2013 ஆம் ஆண்டினுள் தவறாக ஓய்வூதியம் கணிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக 06 ஓய்வூதியம் பெறுபவர்களிற்கு ரூபா 226,576 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அத் தொகை 2013 ஆம் ஆண்டில் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. 2012 திசெம்பர் 20 ஆந் திகதிய 05/2012 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 226,576 தொகைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) மாதம்பை பிரதேச செயலகத்தினால் குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலும் குத்தகைப் பணம் அறவிடாமலும் 03 ஏக்கர் 03 றூட் 20 பேர்ச் விஸ்தீரணமுடைய அரசாங்க காணியில் 09 துண்டுகள் தனியார் வியாபாரி ஒருவருக்கும் கூட்டுறவுச் சங்கமொன்றுக்கும் அனுமதியின்றி பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 55 | 47 | 08 | - |
| மூன்றாம் நிலை | 34 | 15 | 19 | - |
| இரண்டாம் நிலை | 998 | 733 | 265 | - |
| ஆரம்பநிலை | 172 | 153 | 19 | - |
| | 1,317 | 935 | 382 | - |
| ஏனையோர் (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 07 | - | 07 |
| மொத்தம் | 2,576 | 1,890 | 693 | 07 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 693 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 07 ஊழியர்களிற்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.